# தமிழ்ப் பல்கலைக் கழகச் செய்தி மலர்

மலர் – 5 | திருவள்ளுவராண்டு – 2017 ஆனி – 30 | 14–7–1986 | இதழ் – 4


## கொடுமணல் அகழாய்வில் புதிய கண்டுபிடிப்புகள்

தமிழ்ப் பல்கலைக் கழகக் கல்வெட்டியல் துறை கொடுமணலில் இவ்வாண்டு மே–ஜூன் மாதங்களில் நடத்திய இரண்டாம் அகழாய்வில் பல புதிய கண்டுபிடிப்புகள் செய்யப்பட்டு உள்ளன. இந்த அகழாய்வில் சென்னைப் பல்கலைக் கழகத் தொல்லியல் துறையினரும் பங்கேற்றனர். இங்குக் கிடைத்த பொருள்களிலிருந்து அரிய அணிமணிகளும் இரும்பு, செம்புப்பொருள்களும் செய்த தொழிற்கூடமாக இவ்வூர் கி.மு. 3–ஆம் நூற்றாண்டு தொடங்கி கி.பி. 3–ஆம் நூற்றாண்டு வரை விளங்கியது என்பது தெளிவாகிறது. ஊர் இருக்கைப் பகுதியில் மொத்தம் பதின்மூன்று இடங்களில் அகழாய்வு செய்யப்பட்டது. இக்குழிகளில் பல அடுக்குகளில் சுண்ணாம்புச் சரளைக்கல்லும், செம்மண்ணும் கொண்டு கெட்டிப்படுத்தப்பட்ட வீட்டுத் தரைகள் காணப்பட்டன. இவற்றோடு சேர்ந்து தூண்கள் நட்டிருந்த குழிகளின் அடையாளங்களும் மண் சுவரின் அடிப்பகுதி சிறிதும் காணப்பட்டன. சில நிலைகளில் செங்கற்களும் வரியிட்ட கூரைத் தட்டோடுகளும் கிடைத்துள்ளன. தானியங்களைச் சேமித்துவைக்க நிலத்திற்கடியில் வெட்டப்பட்ட வட்டவடிவமான பெரிய குழிகள் காணப்படுகின்றன.



கண்ணன் ஆதன் – பழைய தமிழ் எழுத்து

மேற்கூறிய ஆய்வுக்குழிகளில் வண்ணக் கோடுகள் தீட்டப்பட்ட கறுப்பு, சிவப்புப் பானை ஓடுகள் நிறைய கண்டெடுக்கப்பட்டன. இவற்றோடு உரோமானிய நாட்டுத் தொடர்பைக் காட்டும் வகையில் அந்நாட்டுப் பானைச் சில்லுகளும் ( Rouletted Pottery ) இருந்தன. கறுப்பு, சிவப்பு ஓடுகள் பலவற்றில் பழைய தமிழ் எழுத்துக்கள் (தென் பிராமி) கீறி எழுதப்பட்டு இருந்தன. இவற்றில்

'கண்ணன் ஆதன்', 'வருணீ யகல்'

'கூலந்தை வம்பன் அகல்' – முதலிய சொற்றொடர்கள் காணப்படுகின்றன.

இரும்பினால் செய்யப்பட்ட மணிகள், அம்பு நுனி, கத்தி, அரம், உளி, கம்பி, ஆணி, வளையங்கள் முதலான பொருள்களும், செம்பினால் செய்யப்பட்ட சிறிய ஒலிமணி, துளையிடும் ஊசிகள், மீன் தூண்டில், சுருள் வடிவமான காதுத் தொங்கட்டான், கை விரல் மோதிரம் ஆகியவை கிடைத்துள்ளன.

பளிங்குக்கல், கார்னீலியன், நீலம், பெரில், ஜேஸ்பர் முதலிய அரிய கற்களைக் கொண்டு செய்த மணிகள் (பாசிகள்) கிடைத்தன. இவை யாவும் இந்த ஊரிலேயே செய்யப்பட்டன என்பதை மெய்ப்பிக்கும் வகையில் இக்கற்களின் கட்டிகளும், சில்லுகளும் பல நிலைகளில் காணப்பட்டன.

பவள மணிகளும் சங்கு வளையல்களும் கிட்டியுள்ளன. சுடு மண்ணால் சிறிய பம்பரங்கள் போல் செய்யப்பட்ட நூற்கும் கருவியான தக்கிளியினுடைய அடிப்பகுதி பல இருந்தன. இவற்றில் ஓரிரண்டு, இரும்புக் கம்பிகள் பொருத்தப்பட்ட நிலையில், பழையபடியே இருந்தன.

ஒரு குழியினுள் கி.மு. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த வெள்ளியால் செய்யப்பட்ட முத்திரை நாணயம் (Punchmarked Coin) கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

ஈமக்காட்டில் அகழப்பட்ட மூன்று கற்பதுக்கைகளில் (நீத்தோர் நினைவுச் சின்னம்) பல படையல் பொருள்கள் இருந்தன. இவற்றுள் இரும்பினால் செய்த கத்தி, வாள், கேடயம்; செம்பினால் செய்த கிண்ணம், கரண்டி; ஈயத்தால் செய்த கம்பிச்சுருள், மணிகள்; தங்க மோதிரம் ஆகியனவும் கார்னீலியன் கல்லில் செய்த ஏறக்குறைய ஈராயிரம் மணிகளும் அடங்கும்.

–கல்வெட்டியல் துறை

# மொழியியல் அறிஞர் டி.பர்ரோ மறைவு

1986-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 8-ஆம் நாளன்று மொழியியல் அறிஞர் டி.பர்ரோ மறைந்த செய்தியை அறிய, திராவிட மொழியியலாளர்கள் அதிர்ச்சிக்கு உள்ளாவர். பேராசிரியர் ஆர்.ஈ.ஆஷர் அவர்களின் கடித வழி இந்தியாவின் இப்பகுதிக்கு இச்செய்தி இப்போதுதான் தெரிய வந்தது.

1944 முதல் 1976 முடிய 32 ஆண்டுகள் ஆக்சு போர்டில் சமஸ்கிருதப் பேராசிரியராகப் பணியாற்றிய போது சமஸ்கிருதத்திலும், திராவிட மொழிகளிலும் அவர் ஆற்றிய சாதனை மகத்தானது. 1984-இல் அமெரிக்க நாட்டு அறிஞர் எம்.பி.எமனோவுடன் சேர்ந்து தொகுத்து வெளியிட்ட திராவிடச் சொற்பிறப்பியல் அகரமுதலியின் திருந்திய பதிப்பு அவர் நினைவை என்றென்றும் அழியாது காக்கும் சின்னமாகும். இராபர்ட் கால்டுவெல்லை அடியொற்றி, முன்னவரின் ஊகக் கொள்கைகளை உறுதி செய்யத் துணைநின்ற ஏராளமான செய்திகளைச் சேகரித்தார்.

திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மலையின மொழிகளை அளவீடு செய்ததும், அவற்றைத் தமது சொற்பிறப்பியல் அகராமுதலியில் சேர்த்ததும் அவர்தம் ஆய்வுப் பணியில் இடம்பெற்ற மாபெரும் முன்கால் வைப்புகள் எனலாம். திறந்த மனப்போக்கு மற்றும் நுணுக்கமான ஆய்வுப் புலமைக்காகப் பெரிதும் மதிக்கப்பெற்ற அவர் மறைவினால் அறிவுலகத்தில் தோன்றியுள்ள வெற்றிடத்தைப் பல பத்தாண்டுக் கடின உழைப்பின் பின்னரே பிற அறிஞர்களால் நிரப்பிட இயலும்.

இந்திய அறிஞர்கள் பலரால்—குறிப்பாகத் தென்னாட்டவரால்—வேதம் மற்றும் பிற்கால வேத சமஸ்கிருதத்தில் திராவிடத்திலிருந்து கடன் பெற்றமை சுட்டிக் காட்டப்பட்ட பொழுது மிகச்சிலரே அதனை ஒத்துக் கொண்டனர். ஆனால், ஆக்சுபோர்டில் இருந்து ஒரு சமஸ்கிருதப் பேராசிரியரும் அதே நிலையிலமைந்த அமெரிக்காவைச் சேர்ந்த அறிஞர் ஒருவரும் அதாவது எம்.பி. எமனோவும் இதைக் கூறியபோது அக்கருத்தை எளிதாக ஏற்றனர். மனித குலத்தோரால் பேசப்படாத எந்த மொழியும் அண்டை அயலாரிடமிருந்து கடன் பெறாது இருந்தது இல்லை எனலாம். குறைந்த பேச்சு வழக்கால் குறைந்த கடன் வாங்கலுக்கு வழி செய்யும் என்று கூற இயலும்.

1986 சனவரியில் திருவனந்தபுரத்தில் நடைபெற்ற திராவிட மொழியியலின் அனைத்துலகக் கருத்தரங்கில் பர்ரோ ஒரு விவாதத்திற்குத் தலைமைதாங்கி நடத்தித் தருபவராயிருந்தார். ஏனெனில் சொற்பிறப்பியல் அகர முதலியின் திருந்திய பதிப்பே விவாதத்தின் கருப்பொருளாய் அமைந்திருந்தது. முதுமை, இந்தியாவின் வெப்பம் ஆகியவை அவர் இங்கு வர இயலாமல் தடுத்துவிட்டன. 1970-இல் இக்கட்டுரையாசிரியர் அவரை ஆக்சுபோர்டில் சந்தித்த போது அவர் தோழமை உணர்வோடு விருந்தோம்பியதையும் அவருடன் கழித்த அந்த முழுநாளையும் நன்றியோடு நினைவுகூர்கிறார். அறிஞர்கள் அவரைக் கண்டு அளவளாவ விரும்பினர். தமது அணுகு முறையில் முற்று முழுமையான நுணுக்கத்தை அவர் வெளிப்படுத்தினார்.

திராவிட மொழியியல் கழகத்தின் வாணாள் உறுப்பினர் என்பதுடன் சமஸ்கிருதம் பற்றிய நூலொன்றுக்குப் பத்தாண்டுக்கு ஒருமுறை அளித்திடும் இக்கழகத்தின் பரிசினையும் பெற்றிருக்கிறார். திராவிட மொழியியல் கழகமும் அறிஞர் உலகமும் அவர் நினைவைப்பல்லாண்டும் போற்றும்.

வ.அய்.சுப்பிரமணியம்
துணைவேந்தர்

# பெருஞ்சொல்லகராதி வெளியீட்டுக்கு மைய அரசு நல்கை

* மைய அரசின் மக்கள் வளத்துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம் உருவாக்கி வரும் பெருஞ்சொல்லகராதியின் பத்துத் தொகுதிகளின் வெளியீட்டுக்குப் பத்து இலட்ச உருவா மானியம் அளித்துள்ளது.

* கணிப்பொறி, சித்த மருத்துவம், நூலகம் ஆகிய துறைகளில் பயிற்சி வகுப்புகள்–

* அகராதிக்கலை, கலைச்சொல்லாக்கம் ஆகிய துறைகளில் ஒரு வார காலப் பணிப்பட்டறைகள்–

* நூல்நிலையம், கணிப்பொறி, கோயில் நகரங்கள், இந்திய மொழிப்படிப்பு ஆகிய பொருள்களில் கருத்தரங்குகள்–

* ஊரகமும் – நவீன மாற்றமும் என்பது பற்றிக் குறுகிய காலப் பயிற்சி வகுப்பு–

ஆகிய பத்து அரங்குகளை நடத்துவதற்கு ஐந்தரை இலட்சமும் பல்கலைக் கழக மானியக்குழு அனுமதித்துள்ளது.

இவ்வாண்டு அக்டோபர் மாதத்திற்கு முன் பணிப் பட்டறைகள், பயிற்சி வகுப்புகள் முதலானவற்றை நடத்துவதற்குத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

## பத்துநாள் நாடக விழா

தமிழ்ப் பல்கலைக் கழகப் புதியவளாகத்தில் அமைந்துள்ள ஆடல்வல்லான் திறந்தவெளிக் கலையரங்கில் 22.6.86 முதல் 1.7.86 முடிய பத்துநாள் நாடக விழா நடைபெற்றது.

தமிழ்ப் பல்கலைக் கழக நாடகத்துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்விழாவினைத் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முதுமுனைவர் வ.அய்.சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு இயலிசை நாடகமன்றச் செயலர் உயர்திரு வி.எஸ்.இராகவன் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

தஞ்சைத் தரணியிலுள்ள நாடகக் குழுவினரை ஊக்குவிக்கவும், அவர்களிடையே மறைந்து கிடக்கும் நடிப்பாற்றலை வெளிக்கொணரவும், அவற்றை இனம்கண்டு உற்சாகப் படுத்தவும் இப்பத்துநாள் நாடகவிழா ஏற்பாடு செய்யப்பட்டது. தஞ்சையிலுள்ள ஏறத்தாழ அறுபது நாடகக் குழுக்களில் பத்துக் குழுக்கள் தேர்வு செய்யப்பட்டு , இவ்விழாவில் பங்கேற்றன.

நாடகவிழா முடிவுற்றதும் 2.7.86 அன்று முற்பகல் தமிழ்ப்பல்கலைக் கழக அரண்மனை வளாகக் கருத்தரங்க அறையில் விழாவில் பங்கேற்ற நாடகக் குழுவினரின் கலந்துரையாடல் கலைப்புலத் தலைவர் பேராசிரியர் து.ஆ. தனபாண்டியன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பத்து நாடகங்களிலும் காணப்பட்ட சிறப்புக்கூறுகள், குறைகள் ஆகியவை இக்கலந்துரையாடலின்போது ஆராயப்பட்டன.

சிறந்த நாடகமாக 'சாணக்கிய சபதம்' என்ற நாடகமும், சிறந்த நடிகராக 'சாணக்கியராக' வேடமேற்ற திரு உத்திராபதி என்பவரும், சிறந்த நடிகையாக 'சம்பிரதாயங்கள்' என்ற நாடகத்தில் விதவை முதலாளியாக நடித்த இராணி ஜெயா என்ற நடிகையும் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பரிசு பெற்றனர்.

நாடகவிழாவிற்கு அரங்க அமைப்பு, திரைச்சீலை மற்றும் ஒப்பனை செய்துகொடுத்து உதவிய திரு வெங்கடசாமி அவர்களைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் சால்வை போர்த்திப் பாராட்டியது.

கலந்துரையாடலுக்கு வருகை தந்த அனைத்துக் கலைஞர்களும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் இம்முயற்சியைப் பெரிதும் பாராட்டினர்.

–நாடகத் துறை

## கல்லூரி மாணவர்கள் பேச்சுத்திறமை வளர்க்கப் புதிய அறக்கட்டளை

தமிழ்மொழியில் கல்லூரி மாணவர்களிடையே பேச்சு வன்மையை வளர்க்கும் நோக்குடன் தமிழ்ப் பல்கலைக் கழகம் உரு.1,00,000/–இற்கு அறக்கட்டளை நிறுவி ஆண்டுதோறும் தமிழ்ப் பேச்சுப் போட்டி நடத்தி வெற்றி பெறுவோர்க்குச் சுழற்கோப்பை பரிசளிக்க முடிவு செய்துள்ளது. ஒவ்வோர் ஆண்டும் தமிழ்ப் பல்கலைக் கழக ஆண்டுவிழாக் கொண்டாட்டத்தின்போது, செப்தம்பர் திங்களில் இப்பரிசுகள் வழங்கப்பெறும். தமிழ்ப் பெரியார்கள் திரு.வி.க. அவர்களின் பெயரில் கல்லூரி மாணவிகளுக்கென ஒரு சுழற்கோப்பையும், மறைமலையடிகளாரின் பெயரில் கல்லூரி மாணவர்களுக்கென மற்றொரு சுழற்கோப்பையும் தனித்தனியே ஆண்டுதோறும் வழங்கப்படும்.

## தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் 'மூலிகை ஆய்வு பற்றியபணிப்பட்டறை'

தமிழ்ப்பல்கலைக் கழகச் சித்த மருத்துவத் துறையில் 1986 சூலை 21 முதல் ஆகட்டு 10 வரை மூன்று வார கால மூலிகை மருந்துகள் பற்றிய பணிப்பட்டறை நடைபெற உள்ளது. இப்பணிப்பட்டறையில் சுமார் 30 கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் கலந்து கொள்வர். இப்பணிப்பட்டறை புதுதில்லி பல்கலைக் கழக மானியக்குழுவின் ஆதரவில் நடைபெறுகிறது. இதில் மூலிகைகளின் மருத்துவப் பயன்களான புற்றுநோய், நீரிழிவு, கீல்வாயு, மஞ்சட்காமாலை, பாம்புக்கடி, கர்ப்பத்தடை முதலான செய்கைகளை அறிவியல் அடிப்படையில் சோதித்திடப் பயிற்சி அளிக்கப்படும்.

இப்பட்டறையின் துவக்கவிழா சூலை 21, 1986 அன்று தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முதுமுனைவர் வ.அய் சுப்பிரமணியம் அவர்களால் துவக்கி வைக்கப்படவுள்ளது. சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் எஸ். சுப்பிரமணியன் அவர்கள் தலைமை ஏற்றுச் சிறப்புரையாற்றவிருக்கிறார்கள். தஞ்சை மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் என்.எம்.முத்தையா அவர்கள் வாழ்த்துரை வழங்குவார்கள். இப்பணிப் பட்டறையினைத் தமிழ்ப்பல்கலைக் கழகச் சித்த மருத்துவத்துறைப் பேராசிரியர் ஐ.சாதீக் அவர்கள் நடத்துகிறார்கள்.

தமிழ்ப் பல்கலைக் கழகச்
# செய்தி மலர்
திங்களிதழ்
பதிவெண் 15 33/82X1

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் - 613 001.
தமிழ்நாடு - இந்தியா.

இ.சு.அ. மட்டும்.

40) நிருவாக அதிகாரி
தஞ்சை மகாராசா சரபோசி
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்

## தமிழர் வாழும் அண்டைநாடுகளில் தமிழ்க் கல்வி

முனைவர் தி. முருகரத்தனம்

க[illegible] நாடுகளில் வாழும் 60 இலட்சம் தமிழர்களின் தமிழ் உணர்வையும் தமிழ்ப் பண்பாட்டையும் போற்றி வளர்க்க அவர்களுக்குத் தமிழ்க்கல்வி அடித்தளமாக வேண்டும் [illegible] தமிழ்ப்பல்கலைக் கழகம் செவிலித் தாயாகி அதற்காக ஏற்றுக்கொண்ட பெருமுயற்சியின் வடிவமே இந்நூல்.

திம்மி 1/8   பக்கங்கள் 188   விலை உரு. 57/-

## கடல்வாழ் ஆமைகளின் வியத்தகு வாழ்க்கை

— அ. அப்துல் ரகுமான்

கடல்வாழ் ஆமைகளின் இனங்கள், உணவு முறைகள், கரையில் குழியமைத்து முட்டையிட்டு இனம்பெருக்கும் விந்தை, தமிழகக் கடற்செல்வங்களான இவற்றைப் பாதுகாக்கும் நம்கடமைகள் முதலானவற்றை ஆசிரியர் நுட்பமாக ஆய்ந்து அறிவியற்பண்ணைமூலம் வெளிப்படுத்திய விளக்கவுரையே இந்நூல்.

திம்மி 1/8   பக்கங்கள் 80   விலை உரு. 15/-

---

## தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய வெளியீடுகள்

- ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளை சரித்திரம்
  – உ. வே. சா. பதிப்பின் மறுபதிப்பு — உரு. 120-00
- மனிதனும் மரபியலும்
  – ஞா. இராசராசேசுவரி — உரு. 7-50
- செழியதரையன் பிரபந்தங்கள்
  – பொருப்பதிப்பாசிரியர் மு. சண்முகம் பிள்ளை
  – குறிப்புரை ப. வெ. நாகராசன் — உரு. 107-00
- குடற்புண்ணைக் குணப்படுத்தலாம்
  – சு. நரேந்திரன் — உரு. 5-00
- மேலாளர்
  – ஆங்கிலமூலம் கார்டன் பி. ராபி; தமிழாக்கம் இரா. சுப்பராயலு — உரு. 30-00
- தமிழரின் ஒப்பனைக் கலைத்திறன்
  – வெ. வரதராசன் — உரு. 55-00
- சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம்
  தொகுதி 1 அ–ஔ — உரு. 250-00
- அறுவைச் சிகிச்சை நோய்நாடல்
  – லெ. சிவராமன் — உரு. 120-00
- வாழ்வியற் களஞ்சியம்
  தொகுதி 1 அ–அளபெடை — உரு. 300-00
- பத்துப் பாட்டு – மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்
  – உ. வே. சா. பதிப்பின் மறுபதிப்பு — உரு. 140-00
- தமிழர்வாழும் அண்டை நாடுகளில் தமிழ்க் கல்வி
  – தி. முருகரத்தனம் — உரு. 57-00

---

பதிப்பாசிரியர்: இயக்குநர், பதிப்புத்துறை
அச்சு: தமிழ்ப் பல்கலைக் கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்-613 001.